ආයතනයේ නම : ශ්‍රී ලංකා පොලීසිය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

இலங்கை பொலிஸ்

*நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) யின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.*

**Name of the institution : Sri Lanka Police**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of the standing order No 119(4)**

நிறுவனத்தின் பெயர் - இலங்கைப் பொலிஸ்

**நிலையியற் கட்டளை இலக்கம் *119(4)* யின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.**

**அரச செலவீன கணக்கு சம்பந்தமாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக மேற்பார்வை செய்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை சமர்ப்பித்தல்**

**( Parliamentary Series No.183 )**

**பாராளுமன்ற வெளியீடுகளின் தொடர் – இல 183**

**நிறுவனத்தின் பெயர் – இலங்கைப் பொலிஸ்**

| குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | அக்குறைபாடுகளை மீளமைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| நிலையான சொத்துக்களிற்கான பதிவேடு சரியான முறையில் மேற்கொள்ளப்படாது இருந்தமை. | கணினிமயமாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. |
| கணக்காளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் அனைத்துவிதமான கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாகவும் ஒரு மாத்த்திற்குள் பதில் அழிக்கப்பட்டிருக்காமை. | ஆடிட்டர் ஜெனரல் சமர்ப்பித்த அனைத்து தணிக்கை கேள்விகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டது |
| நிதி விதிமுறைகள் 134(3) பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்துவிதமான கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 31.03.2016 ஆம் திகதி இலக்கம் 5/2016 எனும் அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சொத்துக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உரிய தினத்தன்று உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கமைய இலங்கைப் பொலிஸிற்குரிய அனைத்து நிலையங்களிலும் சொத்துக்கள் ஆய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அதற்குரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டில் உருவாகியிருக்கும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக திட்டமிடபட்டதன் படி ஆய்வு நடவடிக்கைகளிற்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு இயலாது போனமையால் உரிய தினத்தன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் அறிக்கைகள் சமர்ப்பிக்கத் தாமதமானது.<br><br>தற்போதுள்ள ஆண்டுகளுக்கான வருடாந்திர கணக்கெடுப்பு வாரியம் உரிய தேதியில் செய்யப்பட்டுள்ளது. |
| வருடாந்த சொத்துக்கள் ஆய்வு நடவடிக்கைகளான தேவைக்கதிகமான, குறைபாடுகள் சம்பந்தமான வரும் சிபாரிசுகளும், ஏனைய சிபாரிசுகளும் | வருடாந்திர சொத்துக்கள் ஆய்வு நடவடிக்கைகளான மூலம் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான மற்றும் குறைபாடுகள் குறித்த பரிந்துரைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்பட்டன. |

| | |
|---|---|
| நியமித்த கால கட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| வாகனம் ஒன்று கைவிடப்பட்டு 06 மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் ஏலத்தில் விடவோ திருத்தவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இலங்கைப் பொலிஸிற்குரிய போக்குவரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் துஷ்பிரையோகம் செய்வது சம்பந்தமாக வாகனப் பதிவு வாரியத்தினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன் விலை நிர்ணய சபையும் உருவாக்கப்பட்டுள்ளது.அதற்குரிய விலை நிர்ணய சபையினால் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஒவ்வொரு வாகனம் சம்பந்தமாக லொக் குறிப்புப் புத்தகங்கள் மேம்படுத்தப்பட்டதன் அடிப்படையில் முழுமைப்படுத்தப் பட்டிருக்கப்படவில்லை. | அனைத்து வாகனங்களுக்கும் பதிவு புத்தகங்கள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. |
| வங்கி சமரச அறிக்கைகளில் சரி செய்ய வேண்டிய நிலுவைகள் குறித்து, ஒரு மாதத்திற்குள் நிபந்தனைகள் தீர்க்கப்படவில்லை. | வங்கி சமரச அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட 31.12.2020 அன்று சரிசெய்யப்பட்டிருக்க வேண்டிய நிலுவைகள் இதுவரை அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளன. |
| நிதி விதிமுறைகள் 94(1) இன் பிரகாரம் வரவு செலவுத்திட்டத்தில் உட்புகுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் படி பயன்பாட்டிற்குப் பின்னர் மீதமாகவுள்ள நிதி ஒதுக்கீட்டளவின் அனுமதிக்கப்பட்ட அளவினை மீறி பிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. | பொதுமக்களிற்குத் தேவையான சேவையினை வழங்குதல், சட்டத்தையும் சமாதானத்தையும் விரிவாக டைமுறைப்படுத்திச் செல்ல அத்தியாவசியமான மீண்டும் மீண்டும் செய்தல் மற்றும் மூலதனச் செலவினை தாங்குவதற்காக நிதி விதிமுறைகள் 94(1) இன் பிரகாரம் நிதி ஒதுக்கீட்டுடன் விரைந்து பிணைப்பை ஏற்படுத்திட நல்ல நம்பிக்கையுடன் செய்யப்பட்டுள்ளது. |
| ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து இருந்துவரும் நிலுவைக் கடன் தொகை தொடர்கின்றது. | 31.12.2020 ஆம் திகதிக்கு 63,289,864.44 ரூபா கடன் தொகையில் 31.12.2020 ஆம் திகதி 13,532,195.63 ரூபா தொகையினை அறவீடு பண்ணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 49,757,668.81 ரூபா அறவீடு செய்ய வேண்டியுள்ளது.அவ் மிகுதிப்பணத்தை அறவீடு செய்யும் நடவடிக்கை விரிவாகச் செயற்படுத்தப்படுகின்றது. |
| பொது சேமிப்புக் கணக்கில் காலம் கடந்த சேமிப்பு சம்பந்தமாக நிதி விதிமுறைகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 31.12.2020 ஆம் திகதிக்கு 02 வருட காலத்தையும் கடந்து இருந்த சேமிப்புக் கணக்கின் இருப்பு 236,293,468.94 ரூபாவாகவிருந்ததுடன் 31.12.2020 ஆம் திகதியன்று 151,500,408.10 ரூபா வரை குறைவடைந்துள்ளதுடன் மிகுதி இருப்பு சம்பந்தமாக நிதி விதிமுறைகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | |
|---|---|
| ஒன்று திரட்டப்பட்ட வருமானம் உரிய காலத்திற்குள் உரிய நேரத்தில் அனுப்பப் பட்டிருக்கப் படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குள் ஒன்று திரட்டப்பட்ட அனைத்துவிதமான வருமானங்களும் திறைசேரிக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. |
| மதிப்பீடு வருடத்திற்காக பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயல் திறன் அறிக்கைகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கப்படவில்லை. | 2020 செயல் திறன் அறிக்கைகள் 29.11.2020 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், 2021 இன் செயல்திறன் அறிக்கை 2022.10.05 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. |
| 2018 சித்திரை மாதம் 27 ஆம் திகதி இல MSDW/08/65 எனும் சுற்று நிருப விடயதானங்களின் படி செய்யப்படவேண்டிய நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்புபடுத்திட நியமிக்கப்படவேண்டிய உறுப்பினர்கள் இருவர் சம்பந்தமான விபரங்கள் அமைச்சிடம் அறிக்கையிடப்பட்டிருக்கப் படவில்லை. | நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பிற்காக இலங்கை காவல்துறை சார்பாக 09.03.2023 தேதியிட்ட PS/04/12/05/388/2023 கடிதத்தில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் பின்வரும் இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>பிரதி பொலிஸ் மா அதிபர்/ திரு. அசங்க கரவிட்ட<br>சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்/ திரு. லலித் அதுலத்முதலி |
| அரச நிர்வாக ஒழுங்கு விதிகளின் படி சரியான முறையில் தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கப்படவில்லை. | 2020 வருடத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தாலும் அவ்வருடம் வைகாசி மாதத்திலிருந்து பரவிய Covid – 19 நோய்த் தொற்றுக்காரணமாக அத்திட்டத்தின் படி செயற்பட இயலுமை இருக்கவில்லை.<br><br>2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் மனிதவள அபிவிருத்தித் திட்டம் உரியவாறு செயற்படுத்த Covid – 19 நோய்த் தொற்று தடை ஏற்படுத்தியதுடன் 2022 ஆம் வருடம் நாட்டிற்குள் நிலவிய ஆர்ப்பாட்டங்கள் காரணமாக எல்லாத் திட்டங்களிற்கும் வெளியிலிருந்து உத்தி யோகத்தர்கள் அழைக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்த வேண்டிய நிலைமை உருவான காரணத்தால் மனிதவள அபிவிருத்தித் திட்டம் எதிர்பார்த்த இலக்கினை முழுமையாக்க முடியாது போனது. அரச நிர்வாக விடயதானங்களின் படி மிஞ்சிய 02 வருடங்களிற்கும் மனிதவள அபிவிருத்தித் திட்டம் சமநிலைப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இயங்குகின்றது. |
| தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தினூடாக ஒரு சேவையாளரிற்கு குறைந்தளவில் வருடாந்தம் 12 மணி நேர குறைந்தளவான பயிற்சி நியமிக்கப் பட்டிருக்கப்படவில்லை. | இலங்கைப் பொலிஸின் பதவிகளின் படி நிறைவேற்று அதிகார தரம் மற்றும் பணியாளர் தரத்திலான உத்தியோகத்தர்களின் பயிற்சி தேசி பொலிஸ் பயிற்சி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 2023 வருடம் அளவில் அனைத்து நிறைவேற்று அதிகார தரம் மற்றும் பணியாளர் தரத்திலான உத்தியோகத்தர்களிற்கும் குறைந்தது ஒரு கிழமை பயிற்சிப் பாட நெறிக்காக கலந்து கொள்ள பயிற்சித் திட்டத்திற்கு அனுமதி வழங்கி இது வரை |

| | |
|---|---|
| | இயங்குகின்றது.<br><br>நிறைவேற்று அதிகார தரம் அல்லாத பதவிகளிற்குரிய உத்தியோகத்தர்களின் பயிற்சி நடவடிக்கைகள் சேவைக்கால பயிற்சித் தொகுதியினூடாக செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளதுடன் சேவைக்கால பயிற்சித் தொகுதியின் பயிற்சிக் கிளைகள் 14 சரியாக இயங்குவதுடன் 2023 ஆம் வருடம் 73,000 பேரளவில் தற்போதுள்ள சேவையிலுள்ள அலுவலகப் பிரதானி அல்லாத உத்தியோகத்தர்களிற்கு குறைந்தது ஒரு கிழமை அளவிலான காலம் பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட வண்ணமுள்ளது.<br><br>அதற்கும் மேலதிகமாக இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மற்றும் ஊடாக உத்தியோகத்தர்களிற்கு கட்டாயப் பயிற்சி அழிப்பதற்கு மேலதிகமாக பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் 26,000 பேரிற்கு ஆகும்போது பதவிகளின் திடகாத்திரத்திற்கான பயிற்சிப் பாட நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரைக்கும் 40% அளவில் செயற்படுத்தி நிறைவுறுத்தப்பட்டுள்ளது. |
| முழுக் காரிய மண்டலத்திற்கும் உட்பட்டு செயல்திறன் அறிக்கை தயாரித்து ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கைப் பொலிஸின் அனைத்து நிறைவேற்று அதிகார தரம் மற்றும் காரியாலய பிரதானி தரத்திற்கு செயல்திறன் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு தற்சமயம் செயற்படுத்தப்படுவதுடன் 2023 - 2024 வருடங்களிற்காக உத்தேசிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் படி இலக்கினை அடைந்திட 2023 வைகாசி மாத இறுதியளவில் செயற்படுத்த தயாராகவுள்ளது.<br><br>இலங்கை காவல்துறையின் அனைத்து நிறைவேற்று தர மற்றும் பணியாளர் தர உத்தியோகத்தர்களுக்கான செயல்திறன் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. |
| கணக்காளர் நாயகத்தினால் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் / தவறுகள் திருத்தப்பட்டிருக்கப்படவில்லை. | கணக்காளர் நாயகத்தினால் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் / தவறுளைத் திருத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |

டிரான் அலஸ் (பா.உ.)
பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்